# 3

# இராஜ்யங்களின் இராஜ்யம்

*"அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ... அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் " (தானி. 2:44).*

*"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" (கொலோ. 1:13).*

நாளை நடக்கப் போவது என்ன என்பது பற்றிய அறிய நீங்கள் உண்மையாகவே விரும்புவீர்களா? அநேகமாய் விரும்ப மாட்டீர்கள். இன்றைய நாளின் கடமைகளையும் எதிர்காலத்தின் ஏக்கங்களையும் ஒரே வேளையில் சுமக்க நமது தோள்கள் போதிய அளவுக்கு அகலமாய் இருப்பதில்லை! கிறிஸ்துவும் பொது அறிவும் நமக்கு "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34) என்று போதிக்கின்றன(ர்). ஒருவேளை இதனால்தான் தேவன் ஒரு சில மக்களுக்கு மட்டும் காலத்தின் திரையைப் பின்னிழுத்துவிட்டு வரப்போகிற நிகழ்ச்சிகளின் குறிப்புகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். தேவன் அவ்விதம் செய்த பொழுது, அதை அவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் செய்தார், மற்றும் அவர் அதை மனிதருடைய வேலையற்ற ஆர்வத்திற்காகவோ, தனிப்பட்ட ஆதாயத்திற்காகவோ அல்லது வீணான புலன் உணர்வுகளுக்காகவோ அல்ல, மாறாக தம்முடைய தெய்வீக நோக்கங்களுக்காகவே செய்தார்.

தேவன் தம்முடைய ஊழியர்களில் ஒருவருக்கு எதிர்காலத்தைத் திரைவிலக்கிக் காட்டும் வரலாற்று நிகழ்வுகளில் ஒன்றுதான் தானியேல் 2ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகாரமானது "வரப் போகிறதாயிருந்த நித்திய இராஜ்யத்தின் முன்னுரைத்தல்" என்று தலைப்பிடப்பட முடியும்.

பாபிலோனின் மாபெரும் அரசரான நேபுகாத்நேச்சார் கண்டிருந்த கனவொன்று அவரை மிகவும் கலக்கம் கொள்ளச் செய்திருந்தது. இந்தக் கனவானது அசாதாரணமான தனிச் சிறப்பு வாய்ந்தது என்பதை உணர்ந்து அறிந்திருந்த அந்த அரசர் தமது அரசவையில் இருந்த ஞானமுள்ள

மனிதர்களை அழைத்து அதன் (கனவின்) விளக்கத்தைத் தரும்படி அவர்களிடத்தில் கேட்டார். அவர்களின் விளக்கத்தினுடைய மிகச் சரியான தன்மையைச் சோதிக்கும் ஒரு வழிமுறையாக, அந்த அரசர் தாம் கண்ட கனவை அவர்கள் முதலில் கூறும்படியும் அதன் பிறகு அக்கனவின் விளக்கத்தைக் கூறும்படியும் அவர்களை வற்புறுத்தினார். அவர்கள், "ஓ அரசரே, உங்கள் கனவிற்கு விளக்கம் தர நாங்கள் ஆவலும் மகிழ்வும் உள்ளவர்களாய் இருக்கின்றோம், ஆனால் நீர் முதலில் அந்தக் கனவை எங்களுக்குக் கூறவேண்டும்" என்றனர். அந்த அரசரோ, "இல்லை, நீங்கள் அந்தக் கனவைக் கூறி அதன் விளக்கத்தையும் தர வேண்டும். நீங்கள் எனக்கு அந்தக் கனவையும் அதன் விளக்கத்தையும் கூற முடியாவிட்டால், நீங்கள் மரணத்திற்குள்ளாவீர்கள், ஆனால் உங்களால் அந்தக் கனவையும் அதன் அர்த்தத்தையும் கூற முடிந்தால் நீங்கள் பரிசுகளையும், வெகுமதிகளையும் மற்றும் மாபெரும் கனத்தையும் பெறுவீர்கள்" என்று பிடிவாதமாகக் கூறினார். அரசருடைய அதிகார வேண்டுகோளானது அவரிடத்தில் இருந்த ஞானமுள்ள மனிதர்களை அவதிக்குள்ளாக்கிற்று. அவர்கள் அந்தக் கனவை வெளிப்படுத்தி அதை விளக்கப்படுத்தியாக வேண்டும் அல்லது அதைச் செய்யத் தங்களுடைய இயலாமையை ஒப்புக் கொண்டாக வேண்டும். அவர்களுடைய புறதெய்வ மந்திரவாதம் மற்றும் பில்லி சூனியம் போன்றவைகளின் முக்கியமான தேவை ஏற்பட்ட அச்சமயத்தில் அவை தவறி விட்டன. ஞானமுள்ள மனிதர்கள் தங்கள் வார்த்தைகள் திணற, சங்கடப்பட்டு, தாழ்மைப்பட்டு, அரசரிடத்தில் "நாங்கள் அதைச் செய்ய முடியாது. முடியாத ஒரு விஷயத்தை நீர் எங்களிடம் கேட்டுள்ளீர்" என்று அறிக்கையிட்டார்கள். அவர்களுடைய பதிலினால் கோபமூட்டப்பட்ட நேபுகாத்நேச்சார், பாபிலோனில் இருந்த ஞானமுள்ள மனிதர்கள் யாவரும் கொலை செய்யப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்.

ஆரியோகு என்பவரால் வழி நடத்தப்பட்ட (அரசரின்) மெய்க் காப்பாளர்கள் இம்மரணக் கட்டளையை நிறைவேற்றும்படிக்குப் பாபிலோன் நாடு முழுவதும் சென்றார்கள். அவர்கள் தானியேல் என்ற ஒரு எபிரெயரிடத்திலும் வந்தார்கள், இவர் கி.மு. 606ல் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு வந்திருந்தவரும் மிக உன்னதமான தேவனை ஆராதித்து அவருக்குப் பயபக்தி செலுத்தும் மனிதரும் மற்றும் நேபுகாத்நேச்சாரின் மிகுந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான ஞானமுள்ள மனிதர்களில் ஒருவராக எண்ணப்பட்டு அரசருக்கு ஆலோசனையாளராகவும் இருந்தார். கொலைத் தண்டனைக்கான காரணத்தை தானியேல் அறிந்த பொழுது, அவர் உண்மையான தேவனான யெகோவாவின் வல்லமையின்மூலம் தான் அக்கனவையும் அதன் அர்த்தத்தையும் வெளிப்படுத்தும்படியாக அரசரிடத்தில் தன்னை அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார். அந்தக் கனவையும் அதன் அர்த்தத்தை உறுதிப்படுத்தும் ஞானத்தையும் தனக்களிக்கும்படி தேவனிடம் ஜெபிப்பதற்குத் தானியேலுக்கு ஒரு சுருக்கமான கால அளவு அனுமதிக்கப்பட்டது. அவர், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று நமக்கு நன்கு அறியப்பட்டவர்களான தமது தேவ

பக்தியுள்ள நண்பர்களான அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோரிடத்தில் விரைவாய்ச் சென்று, கனவையும் அதன் தனிச் சிறப்பையும் தமக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று தாம் தேவனிடத்தில் ஜெபிக்கும் ஜெபத்தில் தம்முடன் அவர்கள் இணைந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். தேவன் அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் அளித்தார்; இரவு வேளையின் போது, புதிரான அந்தக் கனவிற்கான விளக்கமானது தானியேலுக்குத் தரப்பட்டது. தேவனுக்கு நன்றியும் துதிகளும் செலுத்தப் பட்டன, மற்றும் அவரை (தானியேலை) நேபுகாத்நேச்சார் முன்னிலையில் அழைத்துச் செல்லும்படி ஆரியோகு கேட்டுக் கொள்ளப்பட்டார். புதிரைப் பின்னால் அவிழ்ப்பதற்கு முன்னதாக, தானியேல் அந்தக் கனவை எடுத்துரைக்கவும் அதன் அர்த்தத்தைக் கொடுக்கவும் தனக்குப் பரலோகத்தின் தேவனிடத்திலிருந்தே வல்லமை வந்ததாக உறுதிப்படுத்தினார்.

அரசரை இடறலடையச் செய்து கலக்கப்படுத்திய அந்தக் கனவு என்ன? அரசருடைய கனவானது “கடைசி நாட்களுடன்” தொடர்புடையது என்று தானியேல் கூறினார் (தானி. 2:28). அது எதிர்காலத்தை முன்னுரைத்த ஒரு கனவாக இருந்தது. நேபுகாத்நேச்சார் தம் கனவில் ஒரு பெரிய சிலையைக் கண்டார், அது உயர்வில் வியக்கத்தக்கதாகவும், தோற்றத்தில் பயங்கரமாகவும் இருந்தது. அந்தச் சிலையின் தலை பசும் பொன்னாலும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியினாலும், அதன் வயிறும் தொடையும் வெண்கலத்தினாலும், அதின் கால்கள் இரும்பினாலும் அதின் பாதங்கள் பாதி இரும்பினாலும் பாதி களிமண்ணினாலும் ஆகியிருந்தது என்று தானியேல் நேபுகாத்நேச்சாரிடத்தில் கூறினார். மேலும் மனிதருடைய கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்லைப் பற்றியும் அரசர் கனவில் கண்டதாகத் தானியேல் கூறினார். அந்தக் கல்லானது அந்தச் சிலையின் இரும்பும் களிமண்ணுமான பாதங்களில் உருண்டு வந்து மோதி, அந்தச் சிலையின் பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு மற்றும் களிமண் ஆகியவற்றைக் கோடைக் காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாகும்படி முற்றிலுமாக நொறுக்கியது. அந்தச் சிலையின் அடையாளம் தெரியாதபடிக்கு அதன் எச்சங்கள் காற்றினாலும் அடித்துச் செல்லப்பட்டன. இருப்பினும் அந்தக் கல்லானது வளர்ந்து ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று (தானி. 2:31-35).

இந்தக் கனவின் அர்த்தம் என்னவாயிருந்தது? அந்தச் சிலையின் பொன்னால் ஆன தலை நேபுகாத்நேச்சார் அரசரே என்று தானியேல் கூறினார் (தானி. 2:38). மற்றும் அவர், பாபிலோனுக்குப் பிறகு வல்லமையான மற்ற மூன்று அரசுகள் எழும்பும் என்றும் கூறினார்: அவற்றில் ஒன்று வெள்ளியினாலும், ஒன்று வெண்கலத்தினாலும், மற்றும் ஒன்று களிமண்ணுடன் கலந்த இரும்பினாலும் குறிக்கப்பட்டது.

அம்மாபெரும் சிலையினால் குறிக்கப்பட்ட அரசர்களின் நாட்களில் பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை அமைப்பார் என்று தானியேல் விளக்கப்படுத்தினார். அது எல்லா இராஜ்யங்களுக்கும் மேலாக உயர்ந்து, என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் (தானி. 2:44). நேபுகாத்நேச்சாருடைய கனவானது தானியேலின்

காலத்திலிருந்து முடிவுக் காலம் வரைக்குமான வரலாற்றின் புறக்குறிப்பு ஒன்றைத் தருவதில்லை; இருப்பினும் அது தானியேலின் நாட்களில் இருந்து, உலகின் இராஜ்யங்கள் எல்லாவற்றிற்கும் மேலானதாக உள்ள நித்திய ராஜ்யமாகிய தேவனுடைய இராஜ்யத்தை அவர் (தேவன்) நிலை நாட்டவிருந்த காலம் வரைக்குமான வரலாற்றின் புறக்குறிப்பொன்றைத் தருகின்றது.

நேபுகாத்நேச்சார் கண்டிருந்ததும் தானியேல் விளக்கம் தந்ததுமான இந்தக் கனவானது வரவிருந்த தேவனுடைய நித்திய இராஜ்யத்தைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் உள்ள மாபெரும் தீர்க்கதரிசனங்களில் ஒன்றாக உள்ளது. பரலோக இராஜ்யத்தைப் பற்றிய குறிப்பிடத் தக்க உண்மைகள் இதில் காணப்படுகின்றன. சபையைப் பற்றிய எந்த ஒரு பாடத்திலும் இந்தக் கனவைப் பற்றிய மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட ஒரு படிப்பானது உள்ளடங்க வேண்டும். இது தேவனுடைய இராஜ்யத்தின் இயல்பினுடைய அம்சங்களை வெளிப்படுத்துவதோடு மட்டும் இன்றி, அவருடைய இராஜ்யமானது நிலைநாட்டப்படும் காலத்தைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கின்றது.

## இதன் தொடக்கத்தில் உள்ள தெய்வீகம்

தேவனுடைய இராஜ்யத்தின் தெய்வீகத்தொடக்கம் பற்றி தீர்க்க தரிசனம் அறிவிக்கின்றது. ‘‘அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்’’ என்று தானியேல் கூறினார் (தானி. 2:44). இராஜ்யமானது பரலோகத்திலிருந்து வரவேண்டியதாகவும் தேவனாலேயே ஸ்தாபிக்கப்படுவதாகவும் இருந்தது.

“கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு” வந்த கல் (தானி. 2:34) என்பது, அந்த இராஜ்யமானது மனிதக் கரங்களால் அல்ல, மாறாக தெய்வீகத்துவத்தினால் நிலைநாட்டப்படும் என்பதைக் குறிப்பிட்டது. அது பூமிக்குரியதல்ல, ஆனால் பரலோகத்திற்குரிய இராஜ்யமாய் இருக்கும். அது மனிதரின் பிரசங்கித்தல், திட்டங்கள் அல்லது உணர்வுகள் ஆகியவற்றினால் உண்டாக்கப்படாது; ஆனால் அது எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட வேளையில் ஒரு அற்புத நிகழ்ச்சியின் மூலமாக நிலைநாட்டப்படுவதாக இருந்தது.

வரவிருந்த இராஜ்யத்தைப் பற்றிய இந்த சத்தியமானது இயல்பான வல்லமையை மறைமுகமாய் உணர்த்துகின்றது. தேவனுடைய வல்லமை யானது அதனைப் பண்பு படுத்தும்.

இதனுடைய பரிசுத்தமான தொடக்கமானது நம்பக்கூடிய அமைப்பைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கின்றது. உலகின் மாபெரும் இராஜ்யங்கள் தவறக் கூடிய மேதைத்தனம் மற்றும் புத்திக் கூர்மையினால் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன; ஆனால் கிறிஸ்துவின் இராஜ்யமானது இயற்கைக்கு மேலான தேவனுடைய செயல்பாட்டினால் உருவாக்கப் பட்டு, அழிவற்ற பண்புகளை உடையதாக இருக்கும்.

அது போலவே, இராஜ்யத்தின் தெய்வீக இயல்பானது அதன் *நிரந்தரமான வெற்றியை* உத்தரவாதப் படுத்துகின்றது. தேவன் தமது முதல் முயற்சி தோற்று விட்டதால் தம்முடைய படைப்புகளை மீண்டும் செய்ய அல்லது மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை அவருக்கு ஒருநாளும் ஏற்பட்டதில்லை.

அவர் கிரியை செய்யும் (அவரது) கரங்கள்
ஒருக்காலும் தவறுவதில்லை;
அவர் பேசும் (அவரது) நாவானது
ஒருக்காலும் பிறழுவதில்லை;
அவர் எழுதும் (அவரது) எழுதுகோலானது
ஒருக்காலும் கறைப்படுத்துவதில்லை.
அவர் கூறுவது எதுவாயிருப்பினும்,
இன்னும் சிறப்பாய் அதை (மீண்டும்) கூற முடியாது;
அவர் செய்வது எதுவாயிருப்பினும்,
இன்னும் சிறப்பாய் அதை (மீண்டும்) செய்ய முடியாது.

தானியேல் முன்னுரைத்த ராஜ்யமானது மேலிருந்து அனுப்பப் படுவதாயிருந்தது. அது தேவனுடைய ஆணையொன்றினால் இயக்கம் பெறச் செய்யப்பட்டு, தனது சிருஷ்டிகரின் ஞானம் மற்றும் நித்தியத்துவத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

## இதன் ஸ்தாபிதம் தீர்க்கதரிசனத்தின்படியாயிருந்தது

இராஜ்யத்தின் நிலைநாட்டத்தினுடைய காலத்தின் தெய்வீகத் தேர்ந்தெடுப்பு பற்றியும் இந்தத் தீர்க்கதரிசனமானது குறிப்பிடுகின்றது. தானியேல், "*அந்த ராஜாக்களின் நாட்களிலே,* பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்" (தானி. 2:44) என்று கூறினார். தேவனுடைய இராஜ்யத்தை அந்தச் சிலையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இராஜாக்களின் நாட்களில் தேவன் நிலைநாட்டுவார் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டது, மற்றும் அந்த நான்காவது இராஜ்யத்தின் நாட்களில்தான் அதை நிலை நாட்டுவார் என்பது மறைமுகமாக ஆனால் இன்னும் அதிக திட்ட வட்டமாகக் குறிப்பிடப்பட்டது.

நேபுகாத்நேச்சாரின் கனவில் உலகத்திற்குரிய நான்கு அரசுகள் சித்தரிக்கப்பட்டிருந்தன. முதலாவது நேபுகாத்நேச்சாரின் அரசாக இருந்தது (தானி. 2:37), அவருக்குப் பிறகு ஒன்று வர வேண்டியதாயிருந்தது (தானி. 2:39), மூன்றாவதானது இரண்டாவதைத் தொடர்ந்து வர வேண்டிய தாயிருந்தது (தானி. 2:39), மற்றும் அதன் பிறகு நான்காவது அரசு வரவேண்டியதாயிருந்தது (தானி. 2:40-43).

பாபிலோன் பேரரசைத் தொடர்ந்து மூன்று உலக அரசுகள் ஏற்பட்டிருந்ததை உலகப் பிரகாரமான வரலாறு உறுதிப்படுத்துகின்றது. அவைகள் மேதிய - பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோமப் பேரரசுகள் ஆகும்.

*இரண்டாம் மற்றும் மூன்றாம் அரசுகளான மேதிய - பெர்சியாவும், கிரேக்கமும் தானியேல் 8:20, 21ல் பதிவு செய்யப்பட்டுள்ள தானியேலின் தரிசனத்தில் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.*

*தானியேல் நான்காவது இராஜ்யத்தைப் பெயரிட்டு அழைக்கவில்லை, ஆனால் அது இரும்பும் களிமண்ணும் கலந்ததாக, அதாவது பலமும் பலவீனமும் கலந்ததாக இருக்கும் என்று கூறியதன் மூலம் அதன் பண்பை அவர் விளக்கப்படுத்தினார். பாதங்களும் விரல்களும் இரும்பு மற்றும் களிமண் ஆகியவற்றால் ஆனதாக இருந்தது, ஆனாலும் இரும்பும் களிமண்ணும் வேறுபட்ட அரசுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை; மாறாக, அந்தக் கலவையானது பேரரசில் இருந்த பிரிவினையையும் ஒருமைப்பாட்டுக் குறைபாட்டினையும் அடையாளப்படுத்திற்று. அந்த இராஜ்யமானது உள்ளான ஒருமைத்தன்மையோ அல்லது ஒட்டியிருக்கும் தன்மையோ பெற்றதாயிருக்காது. அது ரோம அரசுதான் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாக இருந்தது, ஏனெனில், அது கிரேக்க அரசைத் தொடர்ந்து வந்த உலகின் அடுத்த பேரரசாகவும் கலவையால் ஆன அரசு போலவும் இருந்தது. முதலில் அது இரும்பைப் போன்று பலமாக இருந்து மற்ற நாடுகளை இரக்கமின்றி நொறுக்கிப்போடும், ஆனால் அது கடைசியில் உள்ளான பிளவுத் தன்மையுடையதாகி, வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் கலகக்காரர்களும் கிளர்ச்சிகளும் எழும்பியுள்ளதாகும்.*

*கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்த கல் அந்தச் சிலைக்கு எதிராக அதன் பாதத்தில் வந்து மோதிற்று. சிலையின் பாதங்கள் என்பது நான்காவது இராஜ்யத்தின் பாகமாய் இருந்தபடியால், நித்திய இராஜ்யமானது நான்காவது இராஜ்யத்தின் காலத்தில் வந்தது என்ற கருத்துத் தொடருகின்றது. ரோமப் பேரரசு உலகை ஆண்ட காலத்தின் பொழுதுதான் கிறிஸ்துவின் ஊழியமும் சபை நிலைநாட்டப்படுதலும் நடந்தேறின. ரோமப் பேரரசு கி.பி. 476ல் அழிக்கப்பட்டது - இது கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் சபை நிலைநாட்டுதல் ஆகியவற்றிற்குப் பின்புதான் நடைபெற்றது, இவைகளுக்கு முன்பு அது நடைபெறவில்லை. ஆகையால் தேவன் தம்முடைய அரசை எப்பொழுது நிலைநாட்டுவார் என்ற காலத்தைப் பற்றித் தானியேலின் தீர்க்கதரிசன மானது திட்டவட்டமாகக் குறிப்பிட்டது: அதை அவர் ரோமப் பேரரசின் நாட்களில் நிலைநாட்டுவார்; ரோமப் பேரரசும் வீழ்ந்து, கடந்து சென்றாலும் தேவனுடைய இராஜ்யமானது என்றென்றைக்கும் தொடர்ந்து இருக்கும்.*

*நான் அர்க்கன்சாஸில் உள்ள ஸர்ஸியில் வாழ்கின்றேன். இதன் அளவுள்ள (மக்கள் தொகை: 18,000) பெரும்பாலான சிறு நகரங்களைப் போலவே இதுவும் துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாரிடமாவது நான் ஸர்ஸியின் குளோவர்டேல் துணைப் பிரிவில் நாங்கள் வசிக்கின்றோம் என்று கூறும் பொழுது, நான் எங்கு வாழ்கின்றேன் என்பதை குறைந்த பட்சம் அவர் தம் சிந்தையில் குறிப்பாக உணர முடியும். அவர், எனது வீடு அமைந்துள்ள ஸர்ஸி நகரின் குறிப்பிட்ட பகுதியை அறிகின்றார்.*

*தேவனுடைய இராஜ்யமானது நிலைநாட்டப்படும் நாளை தானியேல்*

கொடுக்கவில்லை, ஆனால் - "அந்த இராஜாக்களின் நாட்களிலே" என்று - காலத்தின் வேளையை அவர் கொடுத்தார். அக்குறிப்பு இதை குறுகலாக்குகின்றது. தேவனுடைய இராஜ்யத்தின் நிலைநாட்டப்படுதலினுடைய காலத்தின் அடைப்புக் குறியை நாம் இதில் கண்ணோக்குகின்றோம்.

## இதன் வளர்ச்சியில் உள்ள உலகளாவிய தன்மை

தேவனுடைய இராஜ்யத்தின் வியக்கத்தக்க வளர்ச்சி பற்றி சில விஷயங்களைத் தானியேலின் தீர்க்கதரிசனமானது சுட்டிக்காட்டுகின்றது. தானியேல், "சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று" (தானி. 2:35) என்று கூறினார்.

இராஜ்யமானது சிறிய தொடக்கத்தைப் பெற்றிருக்க வேண்டியதாயிருந்தது, ஆனால் அது விரைவிலேயே உலகளாவிய இராஜ்யமாக வளர்ந்தேறுவதாயிருக்கும். மனித உதவியெதுவுமின்றி மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்த கல்லானது உலகம் முழுவதிலும் விளைவுண்டாக்கும் வகையில் ஒரு மாபெரும் மலையாகப் பெருக்கமடையும்.

இயேசு தம்முடைய உவமைகள் ஒன்றில், பரலோக இராஜ்யத்தின் வளர்ச்சியைக் கடுகு விதையொன்றின் வளர்ச்சியுடன் ஒப்பிட்டார். அவர், "அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும் வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத் தக்க மரமாகும் என்றார்" (மத். 13:32).

தேவனுடைய இராஜ்யமானது உலகக் காட்சியில் திடீரென்று உடனடியாக மாபெரும், உலக முழுவதும் பரந்துபட்ட நிலையில் வெடிக்கும் என்று தானியேலால் தீர்க்கதரிசனம் கூறப்படவுமில்லை, அவ்வாறு இயேசுவால் பிரசங்கிக்கப்படவுமில்லை. இருப்பினும் காலம் செல்லச் செல்ல இந்த இராஜ்யமானது நம்ப முடியாத அளவுக்குச் செல்வாக்குள்ளதாக வளரும் என்று தானியேலும் இயேசுவும் முன்னுரைத்தனர். அது சிறியதாகத் தொடங்கி தான் உலகளாவிய அளவீடுகளைப் பெறுமளவும் பெரிதாக வளரும். தேவனுடைய இராஜ்யமானது பெரிதாக மற்றும் மென்னொலியுடன் தொடங்குவதாக இருக்காது, ஆனால் அது சிறியதாக உதித்து, பூமியெங்கும் மேலாகவும் வெளியாகவும் விரிவடையும்.

சாம் வால்ட்டன் என்பவர் தனது பல கோடி ரூபாய் மதிப்புள்ள விற்பனை நிலையங்களை அர்க்கன்ஸாஸில் உள்ள பென்ட்டன்வில் என்ற இடத்தில் ஒரு சிறிய ஐந்து மற்றும் பத்துப் பைசாக் கடையுடன் தான் தொடங்கினார். அவர் தம் முதல் கடையைத் தொடங்குவதற்குக் கடனாகப் பணம் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. அது ஒரு சிறு தொடக்கமாகவே இருந்தது, ஆனால் அவருடைய வியாபாரமானது சிறியதாக இருந்து விடவில்லை. இப்பொழுது இந்த நிறுவனமானது நான்கு மற்றும் ஐந்து இலட்சங்களுக்கிடையிலான எண்ணிக்கையில் வேலையாட்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளது. சாம் வால்ட்டன் தாம் இறப்பதற்கு முன்பு உலகின் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவராக ஆகியிருந்தார். இருப்பினும் அவருடைய விற்பனைப் பேரரசின் குறிப்பிடத்தக்க

வளர்ச்சியானது தேவனுடைய இராஜ்யத்தின் வளர்ச்சி விரிவாக்கத்தின் ஒரு சத விகிதத்தினுடைய மிகச் சிறிய துணுக்களவு கூட இருக்காது (வெளி. 7ஐக் காணவும்). தானியேலின் கூற்றுப்படி, தேவனுடைய இராஜ்யமானது ஒரு சிறு கல் என்ற அளவிலிருந்து ஒரு மலையளவுக்கு, ஒரு (சிறு) நிகழ்விலிருந்து மாபெரும் இயக்கம் அளவிற்கு வளரும்.

## இதன் இயல்பில் உள்ள நித்திய தன்மை

வரவிருந்த இராஜ்யத்தின் தெய்வீக பலம் மற்றும் நித்தியமான இயல்பு ஆகியவை பற்றி தானியேல் தீர்க்கதரிசனம் வலியுறுத்துகின்றது. அவர், “அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; … அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்” (தானி. 2:44) என்று கூறினார். அந்த இராஜ்யமானது மற்ற எல்லா இராஜ்யங்களையும் விடப் பலம் பொருந்தியதாக, நிலைத்து நிற்பதாக இருக்கும்.

ஆவிக்குரிய கரத்தினால் மலையிலிருந்து பெயர்க்கப்பட்டு உருண்டு வந்த அந்தக் கல்லானது சிலையின் பாதத்தில் மோதியதாகத் தானியேல் கூறினார். அந்தச் சிலையானது இடித்து அழிக்கப்பட்டது; அதன் பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இரும்பும் மற்றும் களிமண்ணும் கோதுமைப் பதரைப் போல் ஆகி, காற்றினால் பறக்கப்பட்டன.

இக்காட்சியானது பழங்கால அன்மைக் கிழக்கு நாடுகளில் தானியங்களைப் போரடிக்கும் காட்சிக்கு ஒத்ததாக உள்ளது. அடிக்கப்பட்ட தானியங்கள், அவற்றில் உள்ள மதிப்பற்ற பதரானது மாலைக் காற்றில் அடித்துச் செல்லப்படும்படியாக காற்றில் தூற்றப்படுவதுண்டு. தேவனுடைய இராஜ்யத்துடன் ஒப்பிடப்படும் பொழுது கனவில் கண்ட அந்த நான்கு இராஜ்யங்களும் தானியத்தின் வெளிப்புறத்திலுள்ள உமியைப் போலவே மதிப்பற்றவைகளாய் இருக்கும்.

---

*தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாயிருத்தல் என்பது,*
*வெற்றி கொள்ளப்பட முடியாத ஒரு படையில் இருப்பதைப்*
*போன்றதாக உள்ளது*

---

கடந்த கால, நிகழ் கால, மற்றும் எதிர்காலங்களின் மனிதர்களுடைய இராஜ்யங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் தேவனுடைய இராஜ்யமானது அதிக வல்லமை நிறைந்ததாக உள்ளது. அது ஒருபொழுதும் மனித இராஜ்யம் ஒன்றினாலோ அல்லது உலகத்தில் இணைவுபட்ட இராஜ்யங்களினாலோ வெற்றி கொள்ளப்படாது; தானியேல் 2:44ன்படி அது ஒரு பொழுதும் “வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை.”

தானியேல், “பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு

விடப்படுவதில்லை; ... அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி. 2:44) என்று கூறினார். தானியேல் பயன்படுத்திய மூன்று விளக்கங்கள் ஒரு நித்தியமான இயல்பை மறைமுகமாய் உணர்த்துகின்றன: "என்றென்றைக்கும் அழியாத," "வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை" மற்றும் "தானோ என்றென்றைக்கும் நிற்கும்." ஒருமுறை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, இந்த இராஜ்யமானது என்றென்றைக்கும் வாழ வேண்டியதாயிருந்தது.

நாம் யாவரும் நமக்குள் ஆழத்தில், "நாளைய தினம் எதைக் கொண்டு வரும்?"; "நமது எதிர்கால உலகம் எப்படிப்பட்டதாக இருக்கும்?"; "இன்றிலிருந்து பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நான் எங்கிருப்பேன்?" என்று கேட்கின்றவர்களாகவே இருக்கின்றோம். தானியேலின் புத்தகமானது, நாம் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யத்தின் அங்கமாக முடியும் என்ற பிடிப்பான செய்தியை நமக்குக் கொண்டு வருகின்றது.

தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாயிருத்தல் என்பது எதிர் கொள்ளப்பட வேண்டிய எதிரியின் அளவு அல்லது பலம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாத, வெற்றி கொள்ளப்பட முடியாத ஒரு படையில் இருப்பதைப் போன்றதாக உள்ளது. தேவனுடைய இராஜ்யத்தில் உள்ள குடிமக்களின் சிந்தைகளில் தோல்வியைப் பற்றிய எந்தச் சிந்தனையும் ஒருபோதும் உட்புகக் கூடாது. காணப்படாத நாளைய தினமோ அல்லது அறியப்படாத விரோதியோ ஒருக்காலும் நம்மைப் பயப்படுத்தக் கூடாது.

புகழ் பெற்ற விலங்குகளை வேட்டையாடுபவர் ஒருவர் தனது வெற்றிச் சின்னங்களின் அறையைத் தன் நண்பருக்குக் காண்பித்ததைப் பற்றிய கதையொன்று கூறப்படுவதுண்டு. உலகம் முழுவதிலும் அவர் சென்ற வேட்டைப் பயணங்களில் கொல்லப்பட்ட காட்டு விலங்குகளின் தலைகள் அந்த அறையின் சுவர்களில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. பிறகு அந்த நண்பர், சுவரின் மத்திய பகுதியில் கவனத்தைக் கவரும் இடத்தில் சிங்கத்திடமிருந்து வெட்டப்பட்ட வால் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டார். அந்த நண்பர், "நீங்கள் ஏன் சிங்கத்தின் வாலைத் துண்டித்துக் கொண்டு வந்தீர்கள்? சிங்கத்தின் தலையானது மிகச் சிறந்த காட்சிப் பொருளாயிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். அதற்கு அந்த மாபெரும் விலங்கு வேட்டைக்காரர், "நான் அந்த சிங்கத்தைப் பார்த்த பொழுது, எவரோ ஒருவர் ஏற்கனவே அதன் தலையைத் துண்டித்துக் கொண்டு போய் விட்டிருந்தார்" என்று அமைதியாகப் பதில் அளித்தார். ஏற்கனவே ஒருவர் சிங்கத்தின் தலையைத் துண்டித்திருந்தாரென்றால், அதன் வாலைத் துண்டிப்பதென்பது சுலபமாக உள்ளது!

அது போலவே, வெற்றியானது ஏற்கனவே பெறப்பட்டாயிற்று என்பதை நாம் அறிந்தால், வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. பரலோகத்தின் இராஜ்யமானது ஒருபோதும் தோல்வியை அநுபவிப்பதில்லை. இராஜ்யம் நிலைநாட்டப்படுவதற்கு முன்பு கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் உலகின் மீது அதனுடைய வீரத்தையும் முழுமையான வெற்றியையும் முன்னுரைத்தன. ஆகையால்,

கிறிஸ்தவர் வெற்றியை நோக்கி ஊழியம் செய்யாமல், வெற்றியிலிருந்து ஊழியம் செய்கின்றார். அவர் உறுதிப்பாட்டுடன் வாழ்கின்றார், ஏனென்றால் தோல்வி என்ற சிங்கத்தினுடைய தலையானது ஏற்கனவே வெட்டப்பட்டு விட்டது என்பதை அவர் அறிகின்றார். நாம் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் படித்துள்ளோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு, மனித வரலாற்றின் கதையானது மீட்பின் நித்திய கொண்டாட்டத்தில் தேவனுடைய அரியணைச் சுற்றிலும் முடிவடையும்.

## முடிவுரை

புதிய ஏற்பாட்டில் தானியேலின் தீர்க்கதரிசனத்தினுடைய நிறைவேற்றத்தை நாம் காண்கின்றோமா? இதற்குப் பதில் பெற நாம் அப். 2ஐ நோக்குவோம்.

வரவிருந்த இராஜ்யமானது கர்த்தரால் நிலைநாட்டப்படும், மற்றும் இவ்விதமாக அது தெய்வீகத் தொடக்கம் கொண்டிருக்கும் என்று தானியேல் கூறினார். அப். 2ல் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மேல் அற்புத விதமாக ஊற்றப்பட்டார், மற்றும் சுவிசேஷ யுகமானது சபையின் தொடக்கத்துடன் இயற்கைக்கு மேலான வகையில் நடத்தி வைக்கப்பட்டது. அப்போஸ்தலர்களின் மீது பரிசுத்த ஆவியானவரின் அற்புதப் பொழிதலின் வல்லமையுடன் இராஜ்யம் வரும் என்று இயேசு தம்முடைய ஊழியத்தின்போது சுட்டிக்காட்டியிருந்தார் (மாற். 9:1; லூக். 24:46-49).

வருவதாயிருந்த இராஜ்யமானது ரோமப் பேரரசின் நாட்களின் போது அமைக்கப்படும் என்று இந்தத் தீர்க்கதரிசனம் மறைமுகமாய் உணர்த்திற்று. இந்தக் கால வேளைக்கு அப். 2ன் நிகழ்ச்சியானது மிகத் தெளிவாகப் பொருந்துகின்றது, ஏனெனில் அப். 2ன் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில் ரோமப் பேரரசு உலகை ஆண்டது.

தானியேலின் கூற்றுப்படி, வருவதாயிருந்த இராஜ்யமானது சிறியதாகத் தொடங்கி ஒரு உலக(ளாவிய) வல்லமையாக இருக்கும்படி வளரும். சபையானது அப். 2ல் மனமாற்றமடைந்த மூவாயிரம் பேருடன் தொடங்கியது, மற்றும் அது விரைவிலேயே உலகத்தை (நன்முறையில்) பாதிக்கத் தக்க வகையில் வளரத் தொடங்கிற்று.

வருவதாயிருந்த இராஜ்யமானது உலகின் இராஜ்யங்களை விடப் பலமுள்ளதாக இருக்கும் என்று தானியேல் கூறினார். இயேசு தம்முடைய சபை நிலைநாட்டப்படுதலைப் பற்றி, "பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத். 16:18) என்று கூறினார்.

வருவதாயிருந்த இராஜ்யமானது என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று கர்த்தர் தானியேலுக்கு வெளிப்படுத்தினார். அப். 2ல் சபை நிலைநாட்டப்பட்ட பிறகு, புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள பகுதிகள் அதன் வளர்ச்சியையும் நீடித்த ஆயுளையும் பற்றிக் கூறுகின்றன.

தானியேலின் தீர்க்கதரிசனமானது அப். 2ல் சபை நிலைநாட்டப் படுதலில் நிறைவேற்றப்பட்டது என்பதில் சந்தேகம் ஏதாவது இருக்க முடியுமா?

சபையே தேவன் அமைத்து வைத்துள்ள நித்திய இராஜ்யமாக உள்ளது.

நித்திய இராஜ்யமான கிறிஸ்துவின் சபையில் உறுப்பினராயிருத்தலின் அனுகூலங்கள் மிகத் தெளிவாகக் காணப்பட்டுள்ளன. தேவனுடைய இராஜ்யத்தின் குடிமக்கள் தேவன் உலகத்தில் செய்யும் செயலின் பாகமாய் உள்ளனர். இந்தக் குடிமக்கள் வெற்றியில் வாழ்கின்றனர், ஏனென்றால் மனிதர்களின் இராஜ்யங்களைக் காட்டிலும் தேவனுடைய இராஜ்யம் அதிக பலமுள்ளதாக இருக்கின்றது, அது மரணத்தைக் காட்டிலும் கூட அதிக பலமுள்ளதாக இருக்கின்றது. தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட இந்த இராஜ்யத்தின் குடிமக்கள் தேவனுடனான ஒரு நித்தியமான எதிர் காலத்தைப் பெற்றுள்ளனர். அவர்கள் வாழ்கையில், அவர்கள் தைரியமாக வும், நிச்சயத் தன்மையோடும் உள்ளனர் மற்றும் காலம் கடந்து செல்லும் போது மங்கிப் போகாத அல்லது தேய்ந்து போகாத ஒரு ஜீவனுள்ள ஊழியத்தில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

சரிக்குச் சரியாகப் பொருந்தி வரும் குழுக்கள் இரண்டின் விளையாட்டுப் போட்டியைக் கவனித்தலில் இருந்து நாம் நித்திய இராஜ்யத்தில் இருப்பதின் மதிப்பைக் கற்றுக் கொள்ள முடியும். விளையாட்டு நடக்கையில், நாம் உற்சாகப்படுத்துகின்ற குழுவானது வெற்றி பெறும் என்று நாம் கூற முடியாத நிலையில் இருப்பதால் நாம் பதட்டமாய் இருக்கின்றோம். அந்த விளையாட்டு முழுவதையும் நாம் நமது இருக்கையின் முனையில் அமர்ந்து கொண்டு உன்னிப்பாகக் கவனிக் கின்றோம், ஏனென்றால் அந்த விளையாட்டு எவ்விதமாய் முடியும் என்பதை நாம் அறியாதிருக்கின்றோம். “அதுதான் விளையாட்டை எழுச்சிக்குரியதாக்குகின்றது. அது எவ்விதமாய் மாற்றம் அடையும் என்று நீங்கள் அறிவதில்லை” என்று நீங்கள் கூறலாம். ஒரு விளையாட்டைப் பொறுத்தமட்டில் அது உண்மையாக உள்ளது, ஆனால் வாழ்வைப் பொறுத்தமட்டில் அது உண்மையாக இருப்பதில்லை. வாழ்க்கை எவ்விதமாய் மாற்றம் அடையும் என்று அறியாத நபர் பரிதாபத்திற்கு உரியவராவார். வாழ்வில் தாம் வெற்றியடையும் குழுவில் இருக்கின்றோமா அல்லவா என்பதை அறியாத நிலையில் அவர் வாழ்க்கையினூடாகச் செல்ல வேண்டுமென்றால், சுவிசேஷத்தைத் தவிர வேறு எதனாலும் நீக்கப்பட முடியாத ஆழ்ந்தமர்ந்த ஒரு கடுந்துன்பத்தை அவர் கொண்டிருப்பார். தமது வாழ்வு எவ்விதமாய் முடியும் என்பதை கிறிஸ்தவர் அறிகின்றார்: நித்திய இராஜ்யத்தின் அங்கம் என்ற வகையில் அவர் பரலோகத்தில் தேவனுடன் என்றென்றைக்கும் வாழ்வார்.

இந்த வெளிச்சத்தில், நாம் தேவனுடைய நித்திய இராஜ்யத்தின் அங்கமாய் இருந்தால் நாம் எதை இழக்கின்றோம் என்பது எந்த வித்தியா சத்தையும் ஏற்படுத்துவதில்லை; மற்றும் நாம் தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாய் இராதிருந்தால் நாம் எதை ஆதாயப் படுத்திக் கொள்ளுகிறோம் என்பதும் எந்த ஒரு வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை. அழியக் கூடியது நித்தியமானதாகின்றது, மற்றும் அழிகின்றவர்கள் தேவனுடைய என்றென்றைக்கும் உள்ள இராஜ்யத்தில் பிரவேசிக்கும் பொழுது அழியாமையைத் தரித்துக் கொள்கின்றனர். இயேசு, “நானே உயிர்த்

தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்று கூறினார் (யோவா. 11:25). தேவனுடைய இராஜ்யத்தில், உடல்ரீதியான மரணமும் கூட நம்மை புண்படுத்துவதில்லை. பவுல், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி. 1:21) என்று கூறினார். கிறிஸ்தவருக்கு மரணம் என்பது கிரயம் தரும் முன்மொழிதலாக உள்ளது. பரிசுத்தவானுக்கு மரணம் என்பது வேதனையல்ல ஆனால் அது ஆதாயமாக உள்ளது - அது அழிவாக இன்றி, ஆசீர்வாதமாக உள்ளது.

நீங்கள் இந்த உலகிற்காக மட்டும் வாழ்ந்தால், நீங்கள் இந்த உலகத்தையும், இனி வரப் போகும் உலகத்தையும் தவற விட்டவர்களாவீர்கள் - நீங்கள் அவையிரண்டையுமே இழந்து போவீர்கள். நீங்கள் இனி வரப்போகும் உலகிற்காக மட்டும் வாழ்ந்தால், நீங்கள் இந்த உலகத்தையும் இனி வரப் போகும் உலகத்தையும் பெற்றுக் கொள்வீர்கள் - நீங்கள் இவையிரண்டையுமே ஆதாயப்படுத்திக் கொள்வீர்கள்.

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. நேபுகாத்நேச்சாரிடத்தில் இருந்த ஞானமுள்ள மனிதர்கள் அரசனின் கனவுக்கு விளக்கம் கூற முடியாமற் போனது ஏன்?
2. தேவன் கனவின் விளக்கத்தைத் தானியேலுக்குக் கொடுத்த பொழுது, தானியேல் என்ன செய்து கொண்டிருந்தார்?
3. நேபுகாத்நேச்சார் தனது கனவில் கண்ட சிலையைப் பற்றி விவரிக்கவும்.
4. சிலையின் ஒவ்வொரு பாகத்திற்கும் தானியேல் கொடுத்த விளக்கம் என்ன?
5. இந்தக் கனவு கூறும் வரலாற்றுப் பகுதி எது?
6. இந்த நித்திய இராஜ்யத்தை ஸ்தாபிக்கயிருந்தது யார்? கனவில் இந்த ஸ்தாபிக்கப்படுதலானது எவ்விதம் உருவக நடையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது?
7. நித்திய இராஜ்யமானது எப்பொழுது ஸ்தாபிக்கப் படுவதாயிருந்தது?
8. ரோமப் பேரரசானது எவ்வகைப்பட்ட அரசாய் இருந்தது? கனவில் அது எவ்விதத்தில் சித்தரிக்கப்பட்டது?
9. தேவனுடைய இராஜ்யத்தின் விரிவடைதலை பின்வரும் கூற்றுக்களில் எது மிகச் சிறந்த வகையில் விவரிக்கின்றதாய் இருக்கும்?
   (அ) சிறியதில் இருந்து உலகளாவிய நிலைக்கு
   (ஆ) உலகளாவிய நிலையில் இருந்து சிறியதற்கு
   (இ) உலகளாவிய நிலையில் இருந்து உலகளாவிய நிலைக்கு.

10. தேவனுடைய இராஜ்யத்தின் பலமானது கனவில் எவ்விதம் சுட்டிக்காட்டப்பட்டது?
11. தேவனுடைய இராஜ்யத்தின் நித்திய தன்மையைத் தெரிவிக்க தானியேல் 2ல் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்விளக்கங்கள் யாவை?
12. தானியேல் முன்னுரைத்த இராஜ்யமும் மற்றும் சபையும் ஒன்றே என்பதைக் காரண அறிவிலிருந்தும் மற்றும் வேத வசனங்களில் இருந்தும் நிரூபிக்கவும்.
13. நித்திய இராஜ்யத்தின் குடிமகனாய் இருப்பதின் அனு கூலங்களை அட்டவணைப்படுத்தவும்.